# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 100** **நாள். 12.08.2017**

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம் வார்டு 137– கே.கே. நகர், முனுசாமி சாலை, அண்ணா பிரதான சாலை, ஏரிக்கரை இணைப்புச் சாலையினை பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், (11.08.2017) அன்று கோடம்பாக்கம் மண்டலம் வார்டு 137– கே.கே. நகர், முனுசாமி சாலை, அண்ணா பிரதான சாலை, ஏரிக்கரை இணைப்புச் சாலையினை பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி பொது மக்களின் நலன் கருதி கே.கே. நகர் அண்ணா பிரதான சாலை மற்றும் ஏரிக்கரை இணைப்பு சாலை அமைக்க 03.08.2015 அன்று மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இச்சாலை அமைந்த இடமானது சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்ற வாரியத்திடமிருந்து 46.44 ச.மீ இடம் பெறப்பட்டு அதற்கு ஈடாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் 4320 ச.மீ. இடம் இதற்கு தரப்பட்டது.

இந்த புதிய சாலையில் மைய தடுப்பு சுவர், 12 எண்ணிக்கையிலான கம்பத்துடன் கூடிய ஒளிரும் LED மின் விளக்குகள் மின் வடங்கள் செல்ல தனிப்பாதையுடன் கூடிய நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டது. முன்னர் அண்ணா நெடும்பாதையிலிருந்து எரிக்கரை சாலையை சென்றடைய சுமார் 1 கி.மீ தூரம் சுற்றி வர வேண்டியிருந்தது. இச்சாலை மிகவும் குறுகலான சாலையாக இருந்ததாலும், போக்குவரத்து நெரிசலும், இதனால் ஏற்படும் கால விரையத்தை தவிர்க்கும் பொருட்டும் அவ்வப்பொழுது எற்படும் சிறிய சாலை

விபத்துக்களை கருத்தில் கொண்டு இச்சாலை 285 மீட்டர் நீளத்திற்கு மற்றும் 18 மீட்டர் அகளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் சுமார் ஒரு கிலோ மீட்டர் சுற்றி செல்வது குறைக்கப்பட்டுள்ளது. இச்சாலையானது மணப்பாக்கம், பேரூர், இராமாபுரம், கே.கே. நகர் மற்றும் அசோக் நகர் பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையை தினந்தோறும் குறைந்தபட்சம் 10,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணியின் மதிப்பு ரூ. 281.30 இலட்சங்கள், இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ. 531.30 இலட்சங்கள். சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு கட்டுமானம் மற்றும் கட்டமைப்புகளை மாற்றி அமைப்பதற்க தரப்பட்ட தொகை ரூ.250.00 இலட்சங்கள். பழைய சாலை வழியாக சுற்றி வரும் பாதையின் நீளம் 950 மீட்டர் ஆகும். மழை நீர் வடிகால்வாயின் நீளம் 285 மீட்டர் ஆகும். இந்த சாலையில் நடைப்பாதையின் நீளம் 280 மீட்டர் ஆகும்.

இந்நிகழ்ச்சியில் ஊரக தொழித்துறை அமைச்சர் திரு, பா. பெஞ்சமின் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன்,இ.ஆ.ப., அவர்கள் துணை ஆணையாளர் பணிகள் திரு. எம். கோவிந்தராவ் ,இ.ஆ.ப., அவர்கள் விருகம்பாக்கம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. விருகை வி.என். ரவி அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்துகொண்டனர்

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**

செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி,